COMPLIMENTARY

Registered as a News Paper in Sri Lanka

# குன்றின் குரல்

மலர் 7 || ஏப்ரல் 1987 || விலை ரூபா 1—00 || இதழ் 4

# அகிம்சை போராட்டத்தில் நாம் அனைவரும் பங்கேற்க வேண்டும்

— ஸ்டெலா அந்தனி —

மலையக மக்கள் ஒன்றரை நூற்றாண்டுகளாக இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு தங்களையே அர்ப்பணித்துள்ளார்கள். ஆனால் அவர்களின் உயிர் நாடியான பிரஜா உரிமை பிரச்சினை இன்னும் முழுமையாக தீர்க்கப்படாமல் காலம் காலமாகவே இழுத்தடிக்கப்படுகிறது.

இந்த நாட்டின் தேசியத்தோடு ஒன்றித்து விட்ட இவர்கள் இன்னும் நாடற்றவர்களாக இருப்பது வேடிக்கைகுறியதாகும். இந்த நிலைமையை நீடிக்க விடாமல் கடந்த ஆண்டு பிரார்த்தனை என்ற போராட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்தவிருந்தது. மலையக மக்களின் நாடற்ற பிரச்சினைக்கு விடிவுகாணும் போராட்டம் என்ற படியால் மலைநாட்டிலுள்ள முக்கிய தொழிற்சங்கங்கள் இப் பிரார்த்தனை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முன் வந்தன.

மலையக மக்களின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் கண்ட அரசு உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது இப் பேச்சு வார்த்தையின்போது காணப்பட்ட இணக்கத்தை தொடர்ந்து 1986ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதி நாடற்ற மக்களுக்கு குடியுரிமை வழங்க வழி செய்யும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது, நிறைவேற்றப்பட்ட இச் சட்டம் 1986ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி உறுதிப்படுத்தப் பட்டது. இதன்படி 18 மாத எல்லைக்குள் நாடற்ற மக்கள் அனைவருக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும்.

இந்த கால எல்லை ஆகஸ்ட் மாதம் 18ம் திகதியுடன் முடிவடைகிறது, இந்த கால எல்லையில் பிரஜாவுரிமை கோரும் மனுக்கள் மீதான விசாரணைகள் ஆமை வேகத்தில் நடப்பதால் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

40 ஆண்டு காலமாக இழுபறிபட்ட ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு அதை நிறைவேற்றும் இச் சந்தர்ப்பத்தில் அரசு 10 மாதங்கள் கடந்த பின்னரும்கூட ஒருவருக்காவது பிரஜாவுரிமை வழங்கப்படாமல் இருப்பது வியப்புக்குறியதாகும்.

இதே நேரத்தில் ''சகல நாடற்றவர்களுக்கும் ஜூன் 30ம் திகதிக்கு முன்னதாக பிரஜாவுரிமை வழங்க வேண்டும்'' இல்லாவிட்டால் இ. தொ. கா. அகிம்சைபோராட்டம் ஒன்றை நடத்துமென இ தொ. கா. பிரஜாவுரிமை விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரியும் துணை பொதுச் செயலாளரும், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி உறுப்பினருமான திரு. ஏ. எம். டி ராஜன் அறிவித்துள்ளார். இதனை தொடர்ந்து தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், லங்கா தோட்டத் தொழி

(8ம் பக்கம் பார்க்கவும்)

'' இனி ஒரு விதி செய்வோம் — அதை எந்நாளும் காப்போம் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவாழ்வு

# தாய் சேய் நலம்

ஒவ்வொரு நாட்டிலும் சுகாதார நிலையை மதிப்பிட தாய்மார்கள். பிள்ளைகளின் இறப்பு விகிதமே கணிக்கப்பட்டு வருகிறது.

இன்று ஆயிரம் தாய்மார்களில், மகப்பேற்று காலத்தில் 0.8 தாய்மார்கள் இறக்கின்றனர். ஆனால் 1945-ம் வருடத்தில் இது ஆயிரத்துக்கு 16.5 விகிதமாக இருந்திருக்கின்றது.

குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 பிறப்பில் 37.6 விகிதமானவர்களே இறக்கின்றனர். ஆனால் 1945ல் இது ஆயிரத்துக்கு 139.7 விகிதமாக இருந்திருக்கின்றது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகிய இந்தியா, பாகிஸ்தான், ஆபிரிக்கா, மலேஷியா, தாய்லாந்து ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கை மகற்பேற்று தாய்மார்கள், பிள்ளைகளின் இறப்பு விகிதம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆனால் தோட்டப் பகுதியை நோக்குமிடத்து பெருமைப்படுவதற்கில்லை. காரணம் தோட்டப் பகுதியில் தாய்மாய்கள் இறப்பு, பிள்ளைகளின் இறப்பு மிகவும் அதிகமாக இருக்கின்றது.

சுகாதார வசதிகள், சேவைகள் ஆகியனவும் கூட திருப்தியற்ற நிலையிலேயே இருக்கின்றது. அடிக்கடி வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்கள் அதிகமாக காணப்படுவதுடன் மந்த போஷணையான தாய்மார்கள், குழந்தைகள் அதிகமாக காணப்படுகின்றனர். இவற்றிலிருந்து சுகாதார வசதி திருப்திகரமற்றதாக இருக்கும் நிலை தெளிவாகின்றது.

தாய்மார்கள் கவனிக்க வேண்டியது

ஒவ்வொரு கர்ப்பமுற்ற தாயும் குறைந்த பட்சம் ஒரு முறையாவது வைத்தியரினால் பரிசோதிக்கப்பட வேண்டும். ஏற்பு வலி தடுப்பு ஊசி இரண்டு முறை ஏற்றிக்கொள்ள வேண்டும். முதல் ஊசி ஏற்றி 06 வாரங்களுக்கு பின்னர் இரண்டாவது ஊசியை ஏற்றிக்கொள்ள வேண்டும். மாதமொருமுறை சிகிச்சை நிலையத்துக்கு (கிளினிக்) செல்லவேண்டும். கொடுக்கும் குளிசை போன்ற மருந்துகளை ஒழுங்காக பாவிக்க வேண்டும்.

பிள்ளைகள்

பிள்ளைகளையும் மாதமொருமுறை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்ல வேண்டும். குழந்தைகள் பிறந்தவுடன் சயரோக தடுப்பு மருந்து (பி. ஸி. ஜி.) கொடுக்கப்படவேண்டும், பின்னர் கீழ்கண்ட நோய் தடுப்பு ஊசிகளை கொடுக்க வேண்டும்;

3ம் மாதம் — போலியோ வாய் மூலம் முக்கூட்டு ஊசி மருந்து (நோய்கள்; தொண்டைக் கரப்பன், குக்கல், ஈர்ப்பு)

3ம் மாதம் — போலியோ, முக்கூட்டு

7ம் மாதம் — போலியோ, முக்கூட்டு

9ம் மாதம் — சின்ன அம்மை (MEASLES)

18ம் மாதம் — போலியோ, முக்கூட்டு

5ம் வருடம் — போலியோ, தொண்டைக் கரப்பன், ஈர்ப்பு

மு. சந்திரன்

மேற்குறிப்பிட்ட நோய் தடுப்பு மருந்துகளை தோட்ட, அரசாங்க சிகிச்சை நிலையங்களில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்

வைத்தியசாலைகளில் பரிசோதிக்கப்பட்டவர்கள் மந்த போஷணையுடையவர்கள் எனக் காணப்பட்டால் அவர்களுக்கு 'திரிபோஷ' என்ற மாவு மாதா மாதம் இலவசமாக கொடுக்கப்படுகின்றது. இதனை முறையாக கொதித்து ஆறிய நீரிலே கலந்து உட்கொள்ள வேண்டும். தேவையான புரதச்சத்து இதில் அடங்கியுள்ளது.

குழந்தைகளின் போஷாக்கு உணவு


1 தாய்ப்பாலே மிகச் சிறந்ததாகும். முடியுமானவரை பாலூட்டலாம் நோய் தடுப்பு சக்தியும் இதற்குண்டு.

2 பிள்ளைக்கு 06 மாதமானவுடன் தாய்ப்பாலுடன் கஞ்சி கொடுக்க ஆரம்பிக்கலாம்.

3 பின்னர் கஞ்சியுடன் உடல் வளர்ச்சிக்கான புரத உணவுகளாகிய மீன், பருப்பு வகைகள் முடியுமானால் இறைச்சி ஆகியவற்றை சேர்க்கலாம்.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதியகாற்று

— பீ. மரியதாஸ்

"காலத்தை வென்ற கதைகள்" என்ற ரீதியில் மலையக படைப்பாளிகள் எழுதியுள்ள தரமான சிறுகதைகளை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வண்ணம் குன்றின் குரலில் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்:

இந்த இதழில் பீ. மரியதாஸ் „அஞ்சலி" சஞ்சிகையில் (நவம்பர் 1971) எழுதிய சிறு கதை மறுபிரசுரமாகின்றது.

"சாதாரண மக்களின் உள்ளம் எழுதப் படாத பேப்பரைப் போன்றது. அவர்களிடம் வர்க்க உணர்வேற்பட்டு, வர்க்க எதிரியின் செயல்களை அறிந்து கொண்டால் ! சிறு பொறி காட்டுத் தீயாகப் பரவும். உழைப்போர் விழித்தெழுந்தால் —"

பத்துப் பதினைந்து நிமிடங்களாக இதே வரிகளை மீண்டும் மீண்டும் வாசித்துகொண்டிருக்கிறேன், ஒவ்வொரு வரியும் பென்னம் பெரிய தத்துவமாக வாமனாவதாரம் எடுக்கின்றன. சட்டென்று விளங்கிக் கொள்ள முடியாது, சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது. என்றாலும் விட்டுவிட மனமில்லை. புதிய உலகை விரித்து வைத்தாற் போன்று தொடுவானின் ஒளியாக விரிவடைந்து, படிப்பதற்கும் அதனைப் பற்றி யோசிப்பதற்கும் ஆர்வம் மேலிடுகிறது. கணக்குச் செய்து விடை தேடுபவனைப் போல சிக்கலான போராட்டமாக, போராடிப் பார்ப்பதே இதமாக மீண்டும் தொடர உந்துகிறது. இத்தகைய மோனத்திற்கும், மோனத்திலிருந்து குதித்து விழக் கூடிய விழிப்பிற்குமிடையில் மனம் ஃபேக்டரி ரோலராய் வட்டமிட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்தச் சத்தம் கேட்டது.

வழக்கமாக இப்படி நடப்பதில்லைதான் ஆனால் வழக்கத்திற்கு மாறான சேவற் கோழி முட்டையிடும் ஆர்வமுமல்ல. யாரோ சும்மா இருக்க முடியாத இளைஞன் எப்போதோ. எதற்காகவோ. வாயில் விரல்களை வைத்து விசிலடிப்பது தோட்டங்களில் நடக்கக்கூடியது, இதனால் இதனைப் பற்றி அக்கரைப் படும் நிலையை மனம் வரித்துக்கொள்ளச் சோம்பி அசட்டையாக ஒதுக்கியது,

மீண்டும் அதே போன்ற விசில் ஒரு முறையல்ல பல முறைகள். தொடர்ச்சியாகப் பலர் விசிலடிக்கிறார்கள்! ஒரே நேரத்தில் பல பேர்கள்,

செயலின் தன்மை அதில் முக்கியத்துவம் இருப்பதாக உணர்த்திய போது வீட்டிற்கு வெளியே பரபரப்பு தெரிந்தது. புத்தகத்தை வைத்து விட்டு வெளியில் வந்தேன்.

எல்லோருடைய பார்வையும் ராணுவத்தைத் தோட்டத்தின் பக்கமாக இருந்தது,

இருபது இருபத்தைந்து பேர் இருக்கும். கைகளில் ஏதேதோ ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு மேமலைத் தோட்டத்தை நோக்கி ஓடி வருகிறார்கள் பசிய மலைக்குன்றில் பாறைகள் உருண்டு வருவதைப் போன்று விரைந்து வருகின்றனர். சினிமாவில் வருவதைப் போன்று அபூர்வமான சம்பவம். எதிரியைத் தாக்க வரும் படை வீரர்களைப் போல மலைச்சரிவில் விரைந்து வந்துகொண்டிருக்கின்றனர், வீட்டிற்கு முன்னாலிருக்கும் வேலி பார்வையை மறைக்கின்றது வேலியோரமாக இருக்கும் பாறைமேல் ஏறி நின்று எட்டிப்பார்க்கிறேன்.

ராணுவத்தைக்கும் மேமலைக்கும் எல்லைக் கோடாக வளைந்து நெளியும் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆற்றின் ஓரமாக அக்கரையில் சிறிய பற்றைக் காடு. அகற்க விளிம்புக் கட்டிய தைப்போன்று ஒற்றையடிப்பாதை வளைந்து வளைந்து செல்கிறது ஒற்றையடிப் பாதை வழியாகச் சுற்றி வளைந்து சென்றுதான் மேமலை லயன்களுக்கு வர முடியும். தேயிலை மலையையே வாழ்களமாகக் கொண்ட அவர்கள் தேயிலை நிரைகளையே பாதைகளாக கொண்டு அதன் வழியாக விரைந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வருவதையே பார்த்துக்கொண்டிருந்த மக்களில் சிலர் லயத்தை ஒட்டி ஒதுங்கி நிற்கும் வேலியோரமாகப் போய் நிற்கிறார்கள்,

"யார் தலைவரை அடிச்சது?" இரண்டு மூன்று பேர் ஒன்றாகக் கேட்பது உறுமலாக வருகிறது.

"இங்க ஒருத்தரும் இல்ல தோழர், ஸ்டோர் லயத்துப் பக்கம் உள்ளவன்கள்தான் அடிச்சுபுட்டான்கள்" ஒரு பெண்மணி பதில் கொடுக்கின்றாள்.

"நீங்கள்ளாம் எந்த சங்கம்?" "தோட்டம்

(4ம் பக்கம் பார்க்கவும்)

தான் வேற . ஆனல் வர்க்கமும் சங்கமும் ஒன்று தான் ஒங்க சங்கம்தான்''

அதே பெண்மணி மீண்டும் பதிலிருக்கிருர்.

“இங்க சில பந்தக்காரன்கள் இருக்கிருன்கள். அவன்களை அடிச்சிக்கொன்னு வீடுகளுக்கு நெருப்பு வைக்கனும்,”

வந்தவர்களில் ஒரிளைஞன் கூறிக்கொண்டே மேலே ஏறி வருகிருன்.

''ஐயோ வேண்டாம் தோழர் அப்படி ஒன்னும் செய்யாதிங்க'' பலரின் குரல்கள் கெஞ்சுகின்றன.

',அவன்களை வெட்டிக் கூறு போட்டாத்தான் என் மனசு ஆறும்'

வெஞ்சினமாகவார்த்தைகள் ஒலிக்கின்றன.

மேமலே மக்கள் அவர்களின் செயலை மறுப்பவர்கள் போல அவர்களை மறித்துக் நின்று கெஞ்சுகிருர்.

நான் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றேன் அவர்கள் கேட்ட பாடாயில்லை. சிலர் என்னிடம் வந்து அவர்களைச் சமாதானபடுத்தும்படி கேட்கிருர்கள்,

எப்படிப் பேச்சைத் தொடங்குவதென்று தெரியவில்லை, எல்லோரையும் ஒரு முறை நன்ருகப் பார்க்கிறேன். தொழிலாளர் வர்க்கத்தின் பாது காவலராய் புதிய படை வீரர்களைப் போன்று நின்று கொண்டிருக்கிருர்கள் எல்லோரும் இருபது இருபத்தைந்து வயதுமதிக்கதக்க இளைஞர்கள்ஒவ்வொருவர் கையிலும் கத்தி. கைகோடரி, வாள். இரும்பு. கம்பி இரும்புசங்கிலி போன்ற ஆயுதங்கள் இருக்கின்றன. புதிய உலகைப் படைக்க விரும்பும புதுயுகம் வீரர்களைப் போன்று காட்சியளிக்கின்றனர்.

அவர்கள் எல்லோருக்கும் என்னை நன்ருகத் தெரியும், தொழிலாளர்கள் உங்கள் பகைவர்களா என்று கேட்கிறேன்.

''பகைவங்க இல்லதான் தோழர் ஆனல் இவங்க இல்லியா பகைவன் சார்பில் வந்து மோதுராங்க?'

ஒருவர் பதில் சொல்கிருர்.

உண்மைதான் ஒங்கமாதிரி அவுங்களுக்கு வர்க்க உணர்வு இன்னும் வரல்ல நீங்க வேற தோட்டத்து ஆள்களாக இருந்தும் வர்க்க உணர்வு இருக்கிறதால ஓடி வந்திருக்கிறீங்க ஒங்கமாதிரி வர்க்க உணர்வு வந்திட்டா அவுங்க இப்படி செய்ய மாட்டாங்க தொழிலாளி தொழிலாளிதான். இன்னைக்கில்லா விட்டாலும் ஒரு நாளைக்கு அவுங்களுக்கு வர்க்க உணர்வு வந்துதான் திரும், அதனல் இப்ப அவுங்களை மன்னிக்கனும். திருந்திருவாங்க,

சிறிது நேரம் மௌனமாக நிற்கிருர்கள். காரியம் தடைப்பட்டுவிட்டதன் சோர்வுபடபடப்பாகத் தெரிகிறது.

இவன்க திருந்த மாட்டான்க தோழர், இருந்தாலும் உங்க பேச்சுக்காக விடுகிருேம்:

விட்டு விட்டுப் போக மனமில்லாதவர்களாக நின்ற இடத்திலே நின்று கொண்டிருந்தார்கள்.

அங்க ஸ்டோர் பக்கம் என்னு நடக்குதோ தெரியவில்லை.

கூட்டத்திலிருந்தவர்களில் யாரோ ஒருவர் முணுமுணுக்கிருர்.

'; அந்தப் பயலை ஒழிச்சுக் கட்டுகிருேம்.'' மௌனமாக நின்று கொண்டிருந்தவர்கள் இன்ன ரோட்டு வழியாக வேகமாக விரைகிருர்கள்.

நான் மீண்டும் வந்து புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்கின்றேன் படிப்பதற்கு மனமில்லை கருத்துக்களை மனதில் தேங்க வைக்காது படிப்பதிலும் பயனில்லை புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டே யோசிக்கின்றேன். மனம் திக் திக்கென்று அடித்துக்கொள்கிறது.

கொஞ்சக் காலமாக இப்படித்தான் தோட்டத்தில் அடிக்கடி ஏதாவது சம்பவங்கள் ந-ந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் வேலை தளத்தில் ஏதோ ஒன்று நிகழ்கிறது வேலை விட்டு எல்லோரும் வந்த பிறகும் ஏதேதோ நடக்கின்றன, ஒவ்வொரு சம்பவங்களாக நினைத்துப் பார்க்கையில் நிகழ்ச்சிகளெல்லாம் மனதிரைக்கு ஓடி வருகின்றன,

சிலபேர் தொழிற் சங்கத்தில் சேர்ந்து விட்டார்கள் என்ற இரகசியம் வெளி வந்த நாளன்று தான் முதற் சம்பவம் நடந்தது தொழிலாளர்களை அடிப்பதற்கு ஆட்கள் திரட்டப்படுவதும் அவர்கள் பயமுறுத்தப்படுவதுமாக பல சம்பவங்கள் விரைவாக நடந்தன. தொழிற் சங்கத்தில் யாராவது சேர்ந்தால் அடியுதையோடு பொருட்களை நடு வீதியில் இழுத்து வீசிக் கதவை பூட்டும் நிலைமையின் தொடர்ச்சியில் முறிவு ஒன்று நிச்சயமாக எற்பட்டு விட்டது ஐம்பது அறுபது தொழிலாளர்கள் இரகசியமாகச் சேர்ந்து விட்டார்கள். இதனை உடைப்பது சிரமம்தான். ஆனல் இதனை நிலைக்க விடுவதாலே ஏற்படக்கூடிய நட்டத்தை உணர்ந்தோருக்கு அதனை எப்படியாவது உடைப்பதுதான்முக்கியவேலையாக இருந்தது. பரம்பரையாக இத்தகைய வேலைகளைச் செய்து தழும்பேறிய உள்ளம் சுறுசுறுப்பாக இயங்கியது. எல்லாம் தன் வசமாக. தனக்காகவே என்று இருக்கும் போது எதனைத்தான் செய்ய முடியாது?

பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் ஏன் என்பது யாருக்கும் தெரியாத புதிர் பலர் பல விடையங்களில் தாக்கப்பட்டனர் ஏன யாரால் என்பதற்கெல்லாம் விடை கிடையாது தொழிலாளரைப் பொருத்தமட்டும் எல்லோருக்கும் பயம். ஆனல் அதே நேரத்தில் மனதில் மகிழ்ச்சியும் கூட

5 பக்கம் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் அவர்களின் தொந்தரவான வாழ்க்கை அதனைச் சிருஷ்டித்தவர்களால் அவர்களின் நலன் காக்க அவர்களைக் கருவியாக இயங்க வைக்க நிர்ப் பந்தித்தது சிலர் பாதை மாறி விடிவெள்ளியை மண்ணிற் புதைக்க பாவிக்கப்பட்டனர், இந்நேரத் தில் தான் கீழ் வானின் செம்மைக் கீற்றின் ஒளிக் கதிர்களின் பிரதிப்பலிப்பு அங்கு விரியதொடங்கியது தொழிலாளர்களைத் தாக்குவதற்கு நகரங்களில் அமர்த்தப்பட்ட காடையர்கள் அடித்து நொறுக்க ப்பட்ட சம்பவத்தோடு இதிலொரு திருப்பம் ஏற்ப் பட்டது உழைப்பால் முறுக்கேறிய கரங்கள் எதிர்த் துச் சமர் செய்யத் தொடங்கிய போது பல காடை யர்களும் சண்டியர்களும் கதிகலங்க கண்காணாது ஓடிவிட்டதாகக் கூறினார்கள் ஆயுதம் தரித்த காவல ர்களைத் தவிர உத்தியோக பூர்வமற்ற அடியாட்கள் அவர்களை அணுக அஞ்சினர் தோட்டத்தில் புதிய துடி துடிப்பு தென்பட்டது. பயங்கலந்த இரகசிய மான மகிழ்ச்சி இப்போது வெளிப்படையான மகிழ்ச்சியாக விரிந்தது.

அக்கம் பக்கத்துத் தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் இதற்கு ஆதரவு வேறு வேறு சங்கங் களைச் சேர்ந்த மற்ற தோட்டத் தொழிலாளர்களை இதனை ஆதரிக்கச் செய்த உணர்வை நினைத்துப் பார்த்த பொழுது எனக்குப் புத்தகங்களில் படித்த உண்மை விளங்க தொடங்கியது எனது இத்தனை வருட வாழ்க்கையில் யாருடைய தூண்டுதல் முயற் சியுமற்று வர்களாகவே ஒன்றுப்பட்டு முனைந்து நிற்பதை யதார்த்தமாக இப்பொழுது தான் பார்க் கிறேன்.

இப்படிச் சம்பவங்கள் மாறி நடக்கத் தொட ங்கிய வேளையில் தான் இந்தச் சம்பவத்திற்குக் காரணமான சம்பவம் நடந்தது. வேலை முடித்துப் போனவர்கள் மாலை ஐந்து மணியைப் போல 'பேர் போடுவதற்கு' ஸ்டோருக்குப் போயிருக்கிறார் கள் அதிகமான ஆட்கள் அங்கு இல்லாத நேரம் ஒருவன் வந்து தலைவரைக் கற்களால் அடித்திருக் கிறான் அவர் மயக்கமுற்று கீழே விழுந்துவிட்டார் அவ்வளவுதான் உடனே விஷயம் மற்றவர்களுக்கு எட்டி ஒரே களபரமாகத் தொடங்கிவிட்டது லயத் திலிருந்து சில இளைஞர்கள் ஓடி வர்து தாக்கியவனை அடிக்க அவனது ஆட்கள் எதிர்த்துத் தாக்க புறப் பட கத்தி இரும்பக் கம்பி போன்ற ஆயுதங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இருவருக்கு வெட்டு இருவரும் காருங்காலிகள் என்பதில் மக்களுக்கு மகி ழ்ச்சி சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தவர் கள் வந்து வர்ணித்துச் சொன்னார்கள். வயதுபோன தொழிலாளி ஒருவர் எப்படி ஒருவனை தலை கீழாகத் தூக்கியடித்தார் என்பதை கூறி எல்லோரும் விய ந்தனர் நட்டம் கருங்காலிகளுக்கு நியாயமான செயல் மக்கள் எல்லோரினதும் ஆதரவைப் பெற் றது.

மேமலையில் இவைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கையில் மற்றத் தோட்டங்களில் தலைவர் தாக்கப்பட்ட சம்பவம் மட்டும் பரவியிருக்கிறது அதனைக் கேள்விப்பட்டு வந்தவர்கள் தான் ராணு வத்தைத் தொழிலாள இளைஞர்கள். இவர்களின் வர்க்க உணர்வை நினைத்துப்பார்க்க எனது உடல் சிலிர்க்கிறது.

"சீட்டிச் சத்தம் கேக்குது"
எனது அம்மா கூறுகிறார்,

நான் நனவுலகிற்கு வருகிறேன் மீண்டும் தொட ர்ச்சியாகப் பல முறை விசில் சத்தம் கேட்கிறது வெளியில் வருகின்றேன். வானம் கருந் கும்மெ ன்று இருக்கிறது. இருட்டில் எதுவும் தொரியவில்லை தூரத்தில் நாலைந்து தீப்பந்தங்கள் அசைந்து வரு கின்றன. லயத்து மக்கள் எல்லோரும் ஆவலோடு போய் பார்க்கின்றார்கள்.

" அங்க ஒன்னும் இல்ல தோழர்" வந்த வர்களில் ஒருவர் கூறுகிறார். "நாங்கள் பொயிட்டு வர்ரோம் எதாச்சும் நடந்தால் ஒரு ஆள் அனுப்பு ங்க. ஓடி வந்திர்ரோம் நாங்கள் தூங்கமாட்டோம் சொல்லி விட்டுப் போகிறார்கள் தீப்பந்தங்கள் அசைந்து அசைந்து மலைசரிவில் கருமையை அகற்றிக் கொண்டே போகின்றன மௌனமாக நின்று மக் கள் ஒளியையே பகர்த்துக்கொண்டிருக்கிறார்கள். •


தெளிவு! தெளிவு!! தெளிவு!!!

தமிழ்மொழி மூலமாக பயிலும்
மாணவர்களுக்கு

**G. C. E. (O/L), (A/L)**

✠ பாட சம்பந்தமான சிறந்த அறிவையும்
✠ வினாக்களுக்கு விடையளிக்கும் முறைகளை யும்
✠ மாதிரி வினா விடைகளையும் தாங்கி வெளி வருகின்றது

தெளிவு
(கல்வி. அறிவியல் சஞ்சிகை)

✠ நவீன விஞ்ஞான செய்திகள்
✠ அறிவியல் ஆராய்ச்சி விடயங்கள்
✠ சிறந்த மொழி பெயர்ப்பு கட்டுரைகளை தாங்கி வெளிவருகின்றது

பெற விரும்புவோர் ரூபா 5/50 பெறுமதியான காசு கட்டளை (Money Order) அனுப்புவதன் மூலம் பெறலாம்.

காசு அனுப்பீடுகள்:
P. P. SIVAPRAGASAM, KANDY
(Post Office)
என எழுதப்பட வேண்டும்

விபரங்கட்கு;
Editor: "THELIVEU"
No. 4, Asgiriya Road, Kandy.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலை நாட்டின் கலைமணிகள் (1)

**- சாரல் நாடன் -**

மலையக இலக்கியத்துறையில் அறுபதுகளில் ஏற்பட்ட எழுச்சியில் மலர்ந்த எழுத்தாளர்களில் ஒருவர் சாரல் நாடன்.

சிறு கதை, கவிதை, கட்டுரை. விமர்சனம், மொழி ஆராய்ச்சி என்று தன் இலக்கியப் பணியை தொடர்ந்துள்ளார்.

பிறந்து வளர்ந்து கற்று தொழில் புரிவது அனைத்தும் மலையக மண்ணில் தான். அதனால் தன் பெயரில் அது தெரிய வேண்டும் என்ற அவாவில் குறுந்தொகையில் குறிஞ்சித் திணைப்பாடல்களில் வரும் ''சாரல் நாடன்' என்ற விளிப்புத் தொடரை சுயத்துவமாக கவீகரித்துக்கொண்டார்.

கண்டியில் வெளிவந்த ''மலைமுரசு'' சஞ்சிகையில் மலர்ந்து தேசிய ஏடுகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகிய ஏடுகளில் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன,

அகில இலங்கையிலுமே தேயிலை ஆராய்ச்சி நிலையமும் National Institute of Piantation Management ம் சேர்ந்து நடாத்திய தேர்வில் முதலாவதாக மதிப்பெண்கள் பெற்று தேயிலைத் தோட்டத் தொழிற்சாலை அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

மலையக இலக்கிய வானில் தென்றலாக வீசி புயலாக சீறும் சாரல் நாடனின் எழுத்துக்கள் மலையக இலக்கியத்திற்கு வலிமை சேர்ப்பன,

இவர் எழுதிய 'எவளோ ஒருத்தி'' போன்ற சிறு கதைகள் இதயத்தை தொடுவன. மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆண்டு மலரில் என். எஸ். எம்,ராமையா-தெளிவத்தைஜோசப் ஆகியோருடன் சேர்ந்து ''பலி'' என்ற குறு நாவலை எழுதியுள்ளார்.

அமரர் சி. வி. வேலுப்பிள்ளையைப் பற்றி எழுதிய ''சி. வி: சில சிந்தனைகள்'' என்ற நூல் படித்து பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாகும். இதுபோன்ற பல படைப்புகளை தந்து மலையக இலக்கியத்துக்கு இவர் வலுவூட்ட வேண்டும்.

— அந்தனிஜீவா

---

மலையக

## அறிவுலகும் எழுத்துலகும்

— கவிஞர் மலைத்தம்பி —

''எழுத்தாளர் கல்விமான் மகுடம் பூண்டார்
என்ன செய்தார் மலையகத்தில்'' என்றொருவர் கேட்க
எழுத்தாளர் கூட்டமொன்று நடந்துள்ளது! ஆனால்
எல்லோரும் வாய்மூடி மௌனியானார்!

எழுத்தாளர் கல்வி கற்றோர் இல்லையாயின்
எருமைகளாய்த் தான் எம்மோர் இருந்திருப்பர், இருந்தும்
பழம் பெரும் தலைவரென்பார் இப்படியாய்
பறைசாற்றல் மலைநாட்டுக்கு இழி பெயரே!


எழுத்தால் சிந்தனையால் செயலால். மக்கள்
எழுச்சியுற உழைத்தவரை கேலி பண்ணும்
விழுப்பமற்ற செயல் தன்னை மலையகத்தின் கல்வி
விழிப்புற்றோர் பொறுத்திடார், சீறிடுவர்!

தாள்பிடித்து வாள்பிடித்து தழைத்த நல்ல
தன்மான மலையகத்தின் அறிவுலகம் தாமே
தாளெடுத்துத் தரணிமெச்ச இலக்கியத்தைத்
தரமாக்கி எழுந்ததெம் எழுத்துலகம்!

பாமரர்கள் என்றெம்மைப் பரிகசித்துப்
பள்ளத்தில் தள்ளியவர் முன்னே உணர்ச்சிப்
பாமணக்கச் செய்தாரெம் கவிஞர் கூட்டம்
பல்லறிஞர் பாராட்டக்கொண்டார் நாட்டம்!

எழுத்துலகை அறிவுலகை தெரியா பேர்கள்
எடுபிடிகள் சிலபேரை வைத்துக்கொண்டு
உழுத்த செயல் புரிவதற்கு முனைவாராயின், எம்மோர்
உணர்ச்சிகள் எரிமலையாய் வெடிக்கும் பாரீர்!

(நன்றி ''தேசிய முரசொலி'' மார்ச் 87)




சு. முரளிதரனின்

# தியாக யந்திரங்கள்

(மாத்தளை வடிவேலன்)

புதுக் கவிதை வரவேற்பும், அங்கீகாரமும் பெற்றுவிட்ட இக்கால கட்டத்தில் மலையகத்தைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் பலர் புதுக்கவிதையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிலர் கவிதை என்பது என்னவென்று தெரியாது வார்த்தைகளை பிரித்து போட்டு சிலம்பம் ஆடி வருகின்றனர். ஆனால் தாக்கமான, தனித்துவமான புதுக்கவிதை எழுதி வருபவர்களில், மலையகத்தில் வளர்ந்து வரும் புதுக்கவிதைத் துறையின் நம்பிக்கை நட்சத்திரமான சு முரளிதரனும் ஒருவர்.

மலையகத்தின் முதலாவது புதுக் கவிதைத் தொகுதியாக இவருடைய 'தியாக யந்திரங்கள்' மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வந்துள்ளது.

இந்நூலின் முன்னுரையில் பேராதனை பல்கலைக் கழக விரிவுரையாளரான கலா மனோகரன் அவர்கள் "இக் கவிதைத் தொகுதியில் இடம் பெற்ற கவிதைகள் அனைத்திலும் ஊடுருவி நிற்பது, கவிஞரது முற்போக்கு வழிப்பட்ட சமுதாய நோக்காகும். சமுதாய நோக்கைப் புறக்கணிக்கும் எந்த கவிஞனும் காலத்தோடு வாழ்பவன் அல்லன். காலம் அவனைப் புறக்கணிக்கும். இவ்வகையில் நோக்கும் பொழுது முரளிதரன் காலத்தோடு ஒட்டிய கவிஞராக விளங்குவது அவரது எதிர் கால வளர்ச்சி நிலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. தேநீர், தியாக யந்திரங்கள், நகங்கொண்ட கல்வாள், பொறுமை, ஜுவாலையிடம் சொல்கிறேன் முதலானவை தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் அவல வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியுள்ளன

... —கறுப்பு அழகை. மானிடப் புணர்வு. தேசியம் என்பன நாட்டின் இன்றைய இன்றைய நிலையினையும், எதிர்கால நம்பிக்கைகளையும் கோடு காட்டி நிற்கின்றன' என்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவரான சு. முரளிதரன் "வெறுமனே காதல் ஒப்பாரிகளையும், புத்திஜீவிகளுக்கான கவிப்பிரகடனத்தையும் விட்டு மக்களுக்காக இதில் புதுக் கவிதை ஊசிகளை தயாரித்திருக்கிறேன்" என்கிறார். பெண்களின் கண், கை, கால், மார்புகளையும், வானத்தையும், நிலாவையும் வர்ணித்துக் கொண்டிருக்கும் அழகியல்வாதிகளிடமிருந்து வேறுபட்டு, வித்தியாசமாகவே சிந்திக்கின்றார்.

இதோ தேசியம் என்ற கவிதையில்

கம்பஹாப் பகுதி
வெற்றிலை
கண்டிப் புறத்து
பாக்கு
யாழ்ப்பாணத்து
புகையிலை
காலி கடற்கரைச்
சுண்ணாம்பு
உன்
வாயில் சங்கமிக்க
சிவப்புத் தேசியம்
வெளியேறுகிறது:

என்கிறது.

'தியாக யந்திரங்கள்' தொகுதியில் உள்ள ஒவ்வொரு கவிதைகளும் யதார்த்த பூர்வமான கலைத்துவ சிருஷ்டிகளாக திகழ்கின்றன.

சொல் புதிது சுவை புதிது. ஜோதி மிகு நவ கவிதை என்று புதுக்கவிதைக்கு கோட்டிட்டவனே மகாகவி பாரதி. அவன் வழியில் இப்பொழுது பலர் நவ கவிதையான புதுக் கவிதை படைப்பதில் வல்லவராக திகழ்கின்றார்கள். அதே வரிசையில் மலையகத்தின் முதல் புதுக்கவிதை தொகுதியின் மூலம் அறிமுகமான சு முரளிதரனின் தியாக யந்திரங்களை போல இன்னும் பல படைப்புகளை தருவார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த தொகுதியுள்ள கவிதைகள் முரளிதரன் என்கிற கவிஞரை இனங்கண்டு கொள்ள வழிகாட்டுகிறது. இந்நூல் மலையக வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாக கைக்கு அடக்கமாக வெளி வந்திருப்பது பாராட்டுக்குரியது.

---

✤ 5 முதல் 10 வயதுவரை உள்ள சிறுவர் சிறுமிகளே பெரியவர்களைவிட அதிகம் பேசுகிறார்கள். செக்கோஸ்லோவேகியாவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு வெளியிட்ட தகவல் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி

### அகிம்சை போராட்டத்தில்........

லாளர் யூனியன் ஆகியன போராட்டத்தில் குதிக்க தயாரென அறிவித்துள்ளன. அப்படி ஒரு போராட்டம் ஏற்படும் பட்சத்தில் பிரார்த்தனை போராட்டத்திற்கு தொழிற் சங்கங்கள் ஆதரவு கொடுத்தது போல இந்தபிரஜாவுரிமை போராட்டத்திற்கும் குரல் கொடுக்க வேண்டும்.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இந்த பிரஜாவுரிமை போராட்டத்திற்காக தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து தொழிற்சங்கங்கள் ஒற்றுமை, ஐக்கிய உறவுக்கு கைகொடுத்து உரிமைக்கு குரல் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்க இயந்திரம் விரைந்து செயல்படும் காலம் இன்னும் கடந்து விடவில்லை. நாடற்றவர்களின் குடியுரிமை பிரச்சினை தீர்வுக்கு பொறுப்பாளியாக இருந்த தொழிற்சங்க தலைவர்கள் மீண்டும் கூடி பேசி பிரஜாவுரிமை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3ம் பக்கத் தொடர்ச்சி

### தாய் சேய் நலம்........

4 சிறிதளவு பாதுகாப்பான உணவாகிய பழங்கள், இலைகாய்கறிகள் ஆகியவற்றை சேர்த்துக் கொடுக்கலாம்,

5 தினமும் குழந்தைகளுக்கு நான்கு முறை உணவூட்ட வேண்டும். காரணம் குழந்தைகளின் இரைப்பை அளவில் சிறிதானபடியால் பிள்ளைகளுக்கு அதிக உணவு தேவைப்படுகின்றது.

6 12 மாதம் நிரம்பிய பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களுடன் உணவருந்த வேண்டும்.

தாய்மார்களுக்கு சுகாதாரத்தை பேணிக் கொள்ள தோட்ட முகாமைத்துவம் வைத்திய சாலைகட்கு, கிளினிக் போன்றவற்றிற்கு குழந்தைகளுடன் செல்ல வசதிசெய்து கொடுக்க வேண்டும், பிள்ளைகளுக்கு நான்கு முறை பால், உணவு கொடுக்க லீவு கொடுக்க வேண்டும் என சுகாதார சட்டங்கள் பணித்திருக்கின்றது.

எமது தோட்டப்பகுதி மக்கள் – விசேடமாக வயது சென்றவர்களில் அதிகமானோர் கல்வியறிவில் பின் தங்கிய நிலையில் இருப்பதால் படித்த இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை பிள்ளைகள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்கள் நான் குறிப்பிட்டுள்ளவற்றை விளக்கி அவ்வாறு நடந்து கொள்ள - பின்பற்ற வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டுமென ஆசைப்படுகின்றேன்,

மேலும் விளக்கங்கள் தேவைப்படின் கேட்கவும்.

# திறந்த மடல்!

அன்புள்ளங்கொண்ட குன்றின் குரல் எழுத்தாளர்களே, வாசகர்களே, ஆதரவாளர்களே, தொடர்ந்து மாதந்தோறும் திறந்த மடல் மூலம் உங்களுடன் மனந் திறந்து உரையாட விரும்புகிறேன், கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் இதழ்களை படித்துவிட்டு பலரும் பாராட்டுக்களையும் மலையக தொழிற்சங்க தந்தை கோ. நடேச ஐயர் மலைநாட்டு காந்தி கே. இராஜலிங்கம் பற்றிய கட்டுரைகளை படித்துவிட்டு அவர்களைப் பற்றி மேலும் விபரங்களை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டியுள்ளார்கள். இனிவரும் குன்றின் குரலில் மலையகத்திற்காக உழைத்த மலைநாட்டு மாணிக்கங்களைப் பற்றிய விபரங்கள் இடம்பெற உள்ளன,

மலையகத்தில் மூகிழ்ந்துவரும் இலக்கிய ஆர்வத்தினை மேலும் ஊக்கமும் உட்சாகமும் கொடுக்க கவிதைப் போட்டியொன்றினை நடத்துவது நீங்கள் அறிந்ததே. இந்த போட்டியினை பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஜூன் 15ம் திகதி என முடிவு செய்து உள்ளோம். எக்காரணம் கொண்டும் இத்திகதி நீடிக்கப்படமாட்டாது. ஜூன் மாதம் 27ம் திகதி தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன கலைவிழாவின்போது வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். அதனால் உங்கள் ஆக்கங்களை வெகு விரைவாக அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

இன்னுமோர் வேண்டுகோள்: மாதந்தோறும் குன்றின் குரல் உங்கள் வீடுதேடி வரவேண்டுமானால் ஆண்டு சந்தா 20/- அல்லது அரையாண்டு சந்தா ரூபா 10/-ஐதை காசுக்கட்டளையாக 'Coordinating Secretriate for Plentation Areas' என எழுதப்பட்டு Kandy தபாற்கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அனுப்பிவைக்கவும். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம்.

– ஜே. ஜேஸ்கொடி

குன்றின் குரல் நடாத்தும்

மலையக கவிதைப் போட்டி

முடிவு திகதி 15–6–87

விபரங்கள் அடுத்த மே இதழில்

"குன்றின் குரல்" தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டு செயலகத்தின் சஞ்சிகை. அச்சிட்டு வெளியிடுபவர் வண. போல் கெஸ்பர்ஸ் அடிகள்; முகவரி: 30, புஸ்பதான மாவத்த, கண்டி. அச்சகம்; சென்றல் பிரிண்டர், 98V திருகோணமலை வீதி, கண்டி. இணை ஆசிரியர்கள்; அ. கி இம்மானுவேல், ஜே. ஜேஸ்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org